# தென்மண்டல மயக்கவியல் சங்க மாநாடு - 2024
# (SOUTH ZONE ISACON TAMILNADU 2024)
## இந்திய மயக்கவியல் நிபுணர்கள் சங்கத்தின்
## தமிழ்நாடு மாநில கிளையின் பொன்விழா - 2024

## சிறப்பு தமிழ்க் கவிதைப் போட்டி

**அன்புடையீர்**

இந்திய மயக்கவியல் நிபுணர்கள் சங்கத்தின் தமிழ்நாடு மாநில கிளையின் பொன்விழா கொண்டாட்டம், சேலம் ஏற்காட்டில் நிகழும் தென்மண்டல மயக்கவியல் மாநாட்டில் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. அப்பெரும் நிகழ்வினையொட்டி தமிழ்க் கவிதைப் போட்டி நடைபெற உள்ளது.

**தகுதி:-**

பங்குபெறுவோர் இந்திய மயக்கவியல் நிபுணர்கள் சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும். தென்மண்டல மாநாட்டிற்குப் பதிவு செய்தல் அவசியம். தற்போது தமிழ்நாட்டில் பணி செய்தல் வேண்டும்.

**களம்:-** இயற்கை, தமிழ் மற்றும் மயக்கவியல் துறை சார்ந்து இருத்தல் நலம்.

**அமைப்பு:-**

அழகு தமிழ்க்கவிதை 25 வரிகளுக்கு மிகாமல் சொந்தப் படைப்பாக இருத்தல் அவசியம். எழுத்துரு லதா, அளவு – 10, PDF தொகுப்பாக மே பதினைந்தாம் தேதிக்குள் isatngjtamilpoetry@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். பெயர், கிளையின் பெயர், ISA உறுப்பினர் எண், மாநாட்டுப் பதிவுஎண், அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியுடன் சமர்ப்பிக்கவும்.

- தேவையிருப்பின் பங்கு பெறுவோர் எண்ணிக்கை பொறுத்து இரண்டாம் சுற்று உண்டு என்பதையும் அறிவிக்கிறோம்.
- வெற்றியாளர்கள் ஜூலை 19, ஏற்காட்டில் அன்று நடைபெறும் விழாவில் அறிவிக்கப்படுவார்கள்.
- உங்களது சிறப்பான படைப்புகளுக்காக ஆவலுடன் காத்திருக்கிறோம்!

**கவிதைப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்:**


**Dr. பெரியசாமி,**
ISA புதுக்கோட்டை கிளை,
9750969955,
periyasdr@gmail.com

**Dr. சுப்புலெட்சுமி சுந்தரம்,**
ISA சிதம்பரம் கிளை,
9442176327,
subbulakshmisundaram76@gmail.com

Golden Jubilee Celebration
ISA Tamil Nadu State Branch
ISACON South Zone 2024 Conference,
Yercaud 18th -21st July 2024

## *Tamil Poetry Writing Competition*

### Rules and Regulations:

To participate, you must register for the South Zone Conference 2024, be an ISA life member and currently employed in Tamilnadu.

Your poems should revolve around the themes of nature, anaesthesia, and Tamil culture, avoiding topics of religion and politics.

Keep your poems concise, 25 lines in Latha font and size 10. Send your submissions to this account- isatngjtamilpoetry@gmail.com in pdf form on or before 15th May 2024.

Ensure you include your name, ISA number, workplace, institutional affiliation, mobile number, conference registration number and email ID along with your submissions.

Winners will be announced at the conference on July 19th, with prizes awarded to the top three submissions. If there is higher number of participants second round will be conducted.

Get creative, and let your poetic prowess shine while adhering to the guidelines. We look forward to receiving your captivating creations!

### Tamil Poetry Coordinators:

**Dr. Periyasamy,** Hon.secretary,
Puthukottai,
9750969955,
periyasdr@gmail.com

**Dr. Subbulakshmi Sundaram,** President,
ISA Chidambaram,
9442176327,
subbulakshmisundaram76@gmail.com

**தென்மண்டல மயக்கவியல் சங்க மாநாடு - 2024**
(SOUTH ZONE ISACON TAMILNADU 2024)
**இந்திய மயக்கவியல் நிபுணர்கள் சங்கத்தின்**
தமிழ்நாடு மாநில கிளையின் பொன்விழா - 2024

## சிறப்பு தமிழ்க் கவிதைப் போட்டி

"சுவை புதிது, பொருள் புதிது,
வளம் புதிது, சொற்புதிது
சோதிமிக்க நவகவிதை
எந்நாளும்
அழியாத மகாகவிதை..!"

\- பாரதியார்

**கவிதை:**

25 வரிகள்- ஒருபக்கத்திற்கு மிகாமல்
*(எழுத்துரு லதா; அளவு 12)*
கடைசிநாள் 15.5.2024
அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி:
isatngjtamilpoetry@gmail.com

**கவிதைப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்:**


**Dr. பெரியசாமி,**
ISA புதுக்கோட்டை கிளை,
9750969955,
periyasdr@gmail.com

**Dr. சுப்புலெட்சுமி சுந்தரம்,**
ISA சிதம்பரம் கிளை,
9442176327,
subbulakshmisundaram76@gmail.com

# தென்மண்டல மயக்கவியல் சங்க மாநாடு - 2024

(SOUTH ZONE ISACON TAMILNADU 2024)

## இந்திய மயக்கவியல் நிபுணர்கள் சங்கத்தின்

## தமிழ்நாடு மாநில கிளையின் பொன்விழா - 2024

## சிறப்பு தமிழ்க் கவிதைப் போட்டி




"வானம் அறிந்தது அனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே."

- பாரதி

**கவிதை:**

இயற்கை, தமிழ் மற்றும் மயக்கவியல் துறை சார்ந்து இருத்தல் நலம்.
25 வரிகள்- ஒருபக்கத்திற்கு மிகாமல்
*(எழுத்துரு லதா; அளவு 12)*
கடைசிநாள் 15.5.2024
அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி:
isatngjtamilpoetry@gmail.com

**கவிதைப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்:**


**Dr. பெரியசாமி,**
ISA புதுக்கோட்டை கிளை,
9750969955,
periyasdr@gmail.com

**Dr. சுப்புலெட்சுமி சுந்தரம்,**
ISA சிதம்பரம் கிளை,
9442176327,
subbulakshmisundaram76@gmail.com

தென்மண்டல மயக்கவியல் சங்க மாநாடு - 2024
(SOUTH ZONE ISACON TAMILNADU 2024)
இந்திய மயக்கவியல் நிபுணர்கள் சங்கத்தின்
தமிழ்நாடு மாநில கிளையின் பொன்விழா - 2024

## சிறப்பு தமிழ்க் கவிதைப் போட்டி

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவன்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும்
புகழ்ச்சியில்லை."

- பாரதி

**கவிதை:**

இயற்கை, தமிழ் மற்றும் மயக்கவியல் துறை சார்ந்து இருத்தல் நலம்.
25 வரிகள்- ஒருபக்கத்திற்கு மிகாமல்
*(எழுத்துரு லதா; அளவு 12)*
கடைசிநாள் 15.5.2024
அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி:
isatngjtamilpoetry@gmail.com

**கவிதைப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்:**

Dr. பெரியசாமி,
ISA புதுக்கோட்டை கிளை,
9750969955,
periyasdr@gmail.com

Dr. சுப்புலெட்சுமி சுந்தரம்,
ISA சிதம்பரம் கிளை,
9442176327,
subbulakshmisundaram76@gmail.com

தென்மண்டல மயக்கவியல் சங்க மாநாடு - 2024
(SOUTH ZONE ISACON TAMILNADU 2024)
இந்திய மயக்கவியல் நிபுணர்கள் சங்கத்தின்
தமிழ்நாடு மாநில கிளையின் பொன்விழா - 2024

# சிறப்பு தமிழ்க் கவிதைப் போட்டி

- முதுகலை மாணவர்கள்

அன்புடையீர் !

“இளம் மயக்குநர்களுக்கு
இனிதான விண்ணப்பம்
தமிழ்நாடு பொன்விழா ஆண்டில்
தயங்காமல் கவிமழை பொழியலாம்
இயற்கையில் கலந்து
மயக்கவியலில் தொடர்ந்து
செந்தமிழில் தோய
அனைவரும் வருக”

அமைப்பு:-

25 வரிகள், PDF தொகுப்பாக ஜூன் 30க்குள் isatngjtamilpoetry@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.
அலைபேசி எண், ISA உறுப்பினர் எண் அனுப்பவும்.

வெற்றியாளர்கள் ஜூலை 19, ஏற்காட்டில் அன்று நடைபெறும் விழாவில் அறிவிக்கப்படுவார்கள்.
உங்களது சிறப்பான படைப்புகளுக்காக ஆவலுடன் காத்திருக்கிறோம்!


கவிதைப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்:

Dr. பெரியசாமி,
ISA புதுக்கோட்டை கிளை,
9750969955,
periyasdr@gmail.com

Dr. சுப்புலெட்சுமி சுந்தரம்,
ISA சிதம்பரம் கிளை,
9442176327,
subbulakshmisundaram76@gmail.com

தென்மண்டல மயக்கவியல் சங்க மாநாடு - 2024
(SOUTH ZONE ISACON TAMILNADU 2024)
இந்திய மயக்கவியல் நிபுணர்கள் சங்கத்தின்
தமிழ்நாடு மாநில கிளையின் பொன்விழா - 2024

# சிறப்பு தமிழ்க் கவிதைப் போட்டி

- முதுகலை மாணவர்கள்

## அன்புடையீர் !

"இளம் மயக்குநர்களுக்கு
இனிதான விண்ணப்பம்
தமிழ்நாடு பொன்விழா ஆண்டில்
தயங்காமல் கவிமழை பொழியலாம்
இயற்கையில் கலந்து
மயக்கவியலில் தொடர்ந்து
செந்தமிழில் தோய
அனைவரும் வருக"

## அமைப்பு:-

**25 வரிகள், PDF தொகுப்பாக ஜூன் 30க்குள் isatngjtamilpoetry@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.**
**அலைபேசி எண், ISA உறுப்பினர் எண் அனுப்பவும்.**


கவிதைப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்:

**Dr.** பெரியசாமி,
**ISA** புதுக்கோட்டை கிளை,
**9750969955,**
**periyasdr@gmail.com**

**Dr.** சுப்புலெட்சுமி சுந்தரம்,
**ISA** சிதம்பரம் கிளை,
**9442176327,**
**subbulakshmisundaram76@gmail.com**

தென்மண்டல மயக்கவியல் சங்க மாநாடு - 2024

(SOUTH ZONE ISACON TAMILNADU 2024)

இந்திய மயக்கவியல் நிபுணர்கள் சங்கத்தின்

தமிழ்நாடு மாநில கிளையின் பொன்விழா - 2024

# சிறப்பு தமிழ்க் கவிதைப் போட்டி

**கவிதைப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்:**

Dr. பெரியசாமி,
ISA புதுக்கோட்டை கிளை,
9750969955,
periyasdr@gmail.com

Dr. சுப்புலெட்சுமி சுந்தரம்,
ISA சிதம்பரம் கிளை,
9442176327,
subbulakshmisundaram76@gmail.com

# கோவிட் வீரன் - மயக்குனன் !!

அலறிய இதயங்களை அடக்கும்  மயக்குனரும் நீயே!!
அடங்கிய இதயங்களை தொடக்கும் இயக்குனரும் நீயே!!
கத்திமுனை காயங்களைக் கீட்டமின் கனவுகளாக்கும் கலைஞன் நீ!!
மலைத்தேனிற்கு மயங்காதவரும் உன் ஹலோதேனிற்கு மயங்கினர்!!
நூல் நுழையா நுறையீரலினுள் நீள்குழாய் நுழைக்கும் நுண்ணறிவாளன் நீ!
உன் ஏழாம் அறிவை எழுப்பியது கோவிட்...
பேச்சுக்கள் முடியும் முன்னே மூச்சுக்குள் இடம் பிடித்தது.,
வாசத்தை திருடி கொண்டு சுவாசத்தை சுருங்கடித்தது.,

பஞ்சு போல் பறந்து பூஞ்சையாய் புகுந்து நஞ்சை நெஞ்சில் விதைத்தது,
நேசிக்கும் சுதந்திரத்தை சுவாசிக்கும் இயந்திரத்துள் புதைத்தது!!!

சிதறிய பிணங்களும் கதறிய மனங்களும் கீறும் ரணங்களாய் வலித்தது.!
தொற்று தொடங்கியதால் ஊரடங்கும்,
உயிர் முடங்கியதால் இறுதி சடங்கும்
வாழும் கனங்களை வதைத்தது.!

மழலையின் முத்தங்கள் முகக் கவசத்தினுள் மன்றாடின
தாயின் தீண்டல்கள் தொற்றிடம் தோற்று திண்டாடின
இளம் வயது இழப்புகள்!
சிதைந்து போன சிரிப்புகள் ....!
எண்ணிலடங்கா ஏக்கங்கள் ....!
இமைமூடா தூக்கங்கள் ...!
அனைத்தும் விடியலை நோக்கி வெறித்தது...

மருந்திற்கு  மயங்காத மயக்குநர்களும் மண்டியிட்டோம்
மறுக்க முடியா மரணங்களுக்கு முன்..!!
மண்ணுயிரை பறித்த நுண்ணுயிரே...
நின்னுயர்வை அடக்கிய பின்னே கண்ணயர்ந்தோம்....!!

மரணம் கடந்த மறுபிறப்பை விழி முன் நிகழ்த்தும்
மயக்குனனே!
உன் பன்முக பரிமாணத்தால்
ரணம் தூங்கட்டும், மரணம் நீங்கட்டும்,
மனிதம் ஓங்கட்டும்..!!!

Dr. R. Anu Asheetha
Assistant Professor,
Government Rajaji Hospital, Madurai.
ISA no: A6421

# மயங்கினேன் சொல்ல தயங்கினேன்!!!

மயக்கவியல் வல்லுநரே!

மக்களின் வலி போக்க வந்த மாமருத்துவரே,

முற்பொழுது திரைமறைவில் நீங்கள்,

தற்பொழுதோ அனைத்தும் உம் தலைமையில்,

பல்வேறு பிணிகளுக்கு பலதுறைகள், ஆனால்

அத்துனைக்கும் பக்கபலம் உமது ஓருதுறை!

மூளைக்கட்டியா முழுமயக்கம் என்கிறீர்கள்!

மூட்டுவலியா முதுகுத்தண்டு ஊசி என்கிறீர்கள்!

முழங்கைமுறிவா மயக்காமலே முடக்குகிறீர்கள்![block]

கீட்டமின் கொடுக்க கலர்கனவுகள் எனக்கு!

பெதிடின் குடுக்க பட்டாம்பூச்சிகள் எனக்குள்!

யெஸ்மொலால் கொடுக்க இழைப்பாரும் என் இதயம்!

பொரபபால் கொடுக்கவே, அடியேன் உன் சரணம்!!!!

நீங்கள் மருத்துவரா ? மாந்தீரீகரா ???

ஓருவேளை மாயாவியோ ????!!!!!

ஞாயிறு அன்றுகூட,

ஞாயிறு வரும் முன்பு, நிலவு காய்ந்த பின்பும்,

மானுடம் காக்க மாடாக உழைக்கிறீர்கள்,

மழலை முதல் முதியோர்வரை உங்கள் மடியில் மயங்கிட,

நீங்களோ மதிமயங்காமல் மண்ணுயிர் காக்க!

மலைக்கிறோம் நாங்கள் !!

மயக்கமருத்துவராக மா தவம் செய்திடல் வேண்டுமம்மா !!!

Dr. Narmatha Yangtse,
Associate Professor,
Coimbatore Medical College,
ISA no: N0794

# துறையினுள் திணை !!

திணையினுள் துறை கண்டீர் !
துறையினுள் திணைக்கொளு கேளீரோ கேளிர் !!
நம் குடியினுள் வெட்சி யற உறைவோம் ,
மல்லாடு புயத்தோரே ! மாலிருளும் அல்லிருளும்
அகம் பேணாமல் புறங்காண விழைவோராம் நாம் !
கரந்தை ஓங்குக ! கொடுப்போர் ஏத்தல் தவிர்க்க !!
அறுவை சிகிச்சை நிபுணர் கொடுப்போர் அல்லர் ,
நம்மொடு சக பயணியர் ,சாகாடு நீரே ( நாமே ) !
சாக்காடு கிலியும் பழியும் நமக்கே !
நம் கல்வியில் வஞ்சி வேண்டும், பழி நேரிடின் காஞ்சி !
ஆம், பாதீடு பழியிலும் வேண்டாமா ?
உட்காது எதிர் ஊன்றுக !
திறன் மேம்பட உழிஞை பயில்வீர் !
நம்மினத்தார்கண் நொச்சி களைக !
அன்றாடங்காய்ச்சியல்லன் நீ ! அன்றாடம் உன் காட்சி தும்பையணிதலே!
வென்றாடப்பிறந்தோன் நீ வாகை சூடியே !
உண்டாட்டும் திணை பிசகாது நேர்தலோ !
உன் நட்பு அறுவை சிகிச்சை நிபுணரிடம் கைக்கிளையாய்ப்போயினும் சோராதே !
வாழையடி வாழையாய் அஃது பொருந்திணையாமே !
மீனம் , மேஷம் , உரோகிணி பாரா ரோகந் தீர்க்க விரிச்சியேது ?
இறை வேண்டி வீறு கொள் ! ஏறுகொள் !!

**துறை வெளிப்பாடு : மயக்கவியல் மருத்துவம்**

Dr. Nisha Saral,
Senior Assistant Professor,
Govt. Mohan Kumaramangalam Medical College
ISA no: D1509

# அறுவை சிகிச்சைக்கு முன் மயக்கவியல் பரிசோதனை

அறுவை சிகிச்சைக்கு வருகிறோம் --
அச்சத்தை மட்டுமே
அறுவடை செய்திருப்பார்.
பயப் பதர்களை அகற்றி
நெஞ்சத்திற்குள் நிம்மதி
நெல்மணிகளை நிரப்பவேண்டும்.

மயக்க மருத்துவரிடம்
தயக்கத்துடன் கேட்பார்
வலி இருக்குமோ ?

காதை வருடும் தென்றலாய்
போதை டாக்டரின் கேள்விகள் ??
புத்தியில் செதுக்கி வைத்த
நினைவுச்சொற்களை படித்து
விடையளிப்பார் நோயாளி.

கத்தி வைத்ததுண்டோ ? இதற்கு முன்
கத்தி வைத்ததுண்டோ ?
நினைவின்றி செய்தாரோ ?
தெளிவுடன் விழித்தீரோ ?
தண்டு வடத்தில் ஊசியோ? ஸ்கேன்
கண்டு நரம்பை மரக்கச்செய்தனரோ ??

சுகர், பிரஷர், ஆஸ்த்மா
வலிப்பு உண்டோ ?
சலிப்பு வரும்
தொடர்ந்து வரும்
தொடர்பில்லாத கேள்விகளால் !
விரக்தியுடன் விடை தருவார்,
விரைவும் நிறைவும் இல்லாமல் --

சளைக்காத மருத்துவர்,
உருண்டு வரும் உற்சாகத்துடன்
வினாக்களை மேலும் வைப்பார்--
வாடிய காய் கால்களுடன்,
பேச்சுத்திணறல் உண்டா?
மாடியேறியவுடன்
மூச்சுத்திணறல் உண்டா?

குறட்டை சீரியதோ?
குரல் மாறியதோ?
குருதி ஏறியதோ?

சாராயமோ , புகையோ .
ஆராய வேண்டும் முழுமையாய் -
முரட்டு வார்த்தைகளால்
திருத்த மாட்டார் -
வெண்ணைச்சொற்களால்
நிறுத்தச் சொல்வார்.

மருத்துவ ஏடுகளை
எடுக்கச்சொல்வார்..
பேப்பர் காடுகள் வரும்--
அதில் அவர் உண்ணும் மருந்துகளை
கண்டுபிடித்ததாக வேண்டும்.

மயக்க மருந்துடன் ஒட்டாத
மருந்துகளை ஒதுக்க வேண்டும்.

மருத்துவர் -
நாடியை பிடிப்பார்
வேரோடு படிப்பார்
அலுப்பின்றி அழுத்தம் பார்ப்பார்
இரத்த அழுத்தம் பார்ப்பார் - அதுவும்
இரண்டு முறை

சோகையும் சோர்வும்
ரண சிகிச்சை படிக்கல்லில்
கீழே தள்ளும் -
தூக்கி நிறுத்துவார் --

சொத்தை பற்கள் உண்டு
வாய் திறக்க சொல்லி
வாடையை மறந்து
மல்லுக்கட்டி குறிப்
மல்லம்பட்டியின் அளவை

தலையையும் கழுத்தையும்
ஆட்டிப்பார்ப்பார் --
ஓடும் நரம்புகளை
தேடும் பணிகளும் உண்டு --

இருதய துடிப்பில்
சுருதி பிசகியதோ?
ரிதம் மாறியதோ?
சோதனை முடிந்து
பரிசோதனைக்கு வருவார்.

இரத்த அணுக்களின்
நுணுக்கங்கள் சரியோ ?
உப்பு, சர்க்கரை - அளவுகளில்
தப்பு உளதோ?

மின்சாரம் ஓடும் இதயம்,
தன சாரம் இதுவென்று சொல்லுமே,
பதித்த ரேகைகளை (ECG)
படித்தாக வேண்டுமே!
இருப்பு குறைந்ததோ - ஒரு மூப்பு
இதயம் - அளந்தாக வேண்டுமே. (ECHO)..

மேகங்களை அளக்க முடியுமோ ?
தேகங்களும் அப்படியே !
டெஸ்ட்டுகளால் அளக்க முடியாத
நோய்களும் உண்டு!!

தொகுத்த உண்மைகளை சலித்து
வகுப்பார் மயக்கத்திட்டமொன்றை --
பகிர்வார் அதை பிணியாளரிடமும் ,
அவர் உறவுகளுடனும் --

கல்லெடுக்க ஒருவர்-
பல்லெடுக்க ஒருவர்
கருப்பை அகற்ற ஒருவர்
உறுப்பை மாற்ற வேறொருவர்
எலும்பை ஒட்ட இன்னொருவர் !!
எந்த நோயாளியையும் வலியின்றி
உயிர் காக்க ஒரே ஒருவர் -
பெருமையுடன் சொல்வார்
தோளில் தட்டி பொறுமையுடன் சொல்வார்
நானிருக்கிறேன் என்று !!

வந்தவர் கண்களில்
காணாமல் போன கலக்கம் --
அச்சத்தின் மிச்சங்கள் கூட
அகன்ற நிலையில்
நன்றியுடன் திரும்புவார்
மயக்குனரை கும்பிட்டு !!

Dr. S. Parthasarathy
Professor,
Mahatma Gandhi Medical College, Puducherry.
ISA: P0930

# வலியின் வலி

உன்னைப் போல் ஒருவனில்லை...
வந்தாய்...வலியை வென்றாய்
அறுவை சிகிச்சை அரங்கிற்கு
வரும் வரை நீ யாரென்று அறியேன்...
அறுவை சிகிச்சையின் வலிக்கு தான் பயந்தேன்...
திரும்ப வரமுடியாத நிலைக்கு சென்று விடுவேனோ என்று அச்சம்
கொண்டேன்...
என்ன மாயம் செய்து என் உடலை நான் அறியாமல்
பகுப்பார்கள் என்றறியேன்...
என்னை அறியாமல் என்னுள் பார்க்க முடியுமா? என வியந்தேன்...
வந்தாய்... இவை அனைத்தும் மிக சரியாக செய்தாய்...
அலையில் மிதந்தேன்...வானத்தில் பறந்தேன்...
வலியொன்றும் உயிர் பயமொன்றும் நானறியேன்... உன் இருப்பால்
என் தலையருகே நீ இருந்தாய்...தலையான வேலைகள் அனைத்தும் செய்தாய்
எனக்கு பொறுப்பெடுத்தாய்... உன் சுகம் மறந்தாய்...
ஓரிடத்தில் நிற்காமல் அறுவை அரங்கில் ஓடோடினாய்...
அழ மறந்த பிறந்த குழந்தையை உயிர்பித்தாய்...
விளக்கு சரியில்லை என்றால் ஒளியூட்டினாய்...
உள்ளே நடக்கும் அனைத்து நிகழ்வுகளுக்கும் பொறுப்பெடுத்தாய்
ஆழ்கடலில் செல்லும் கடற்பயணம் போல் கப்பலை செம்மையாக செலுத்தினாய்
சமுத்திரம் என்ற பயமோ...சுறாக்கள் சுற்றுகின்றன என்ற அபாயமோ அறியாமல்
மயங்கினேன்...
நான் தூங்கும் போது நீ விழித்திருந்தாய்...
உன் ஜோடி பற்றி கவலைப்படாமல் என் நாடி பற்றியே யோசித்தாய்...
நீ இன்றி நானில்லை...
என் இனிய மயக்குனரே...!
சரி... சரி... வேண்டுமென்றால் இன்னொரு கவிதை எழுதுகிறேன்
இப்போதைக்கு பிரித்துப் பார்க்காமல் இந்த கவரை வாங்கி செல்...

Dr. R. Selvakumar,
ISA State President,
ISA no: S2076

## யார் இவர்கள் ?

காயத்தால் வருத்தும் வலியையும்
மாயத்தால் அகற்றும் சுந்தரர்கள்
நோயால் பெருகும் வேதனையையும்
நேயத்தால் நெகிழ்த்தும் மானுடர்கள்

விதி என்பது ஒருவனுக்கு பகையானால்
வலி என்பது அவனுக்கு உறவாகும்
நியதிகளை கடக்கும் நோய்களுக்கும்
நீதிகளை வழங்கும் நிதர்சனர்கள்

காட்டாற்று வெள்ளமென உதிரம்
நட்ராற்றில் தள்ளாடும் மனிதன்
மூச்சடக்க காலன் காத்திருக்க
இடையில் புகுந்து அவன் சுவாசப்பை திறக்கும் சாணக்கியர்கள்

தன் உயிரை நலிந்தவனுக்கு தவணையாய் தந்துவிட்டு
மொத்தமாய் மூச்சற்று கிடப்பவனை
சத்தமின்றி உயிர்ப்பிக்கும் ரசவாதி

புண்பட்டவன் விழி மூடி பின் திறக்க
தன் விழி மூடாமல் மொழி பேசாமல் பொன்னாய் நிற்கும் மௌனசாட்சிகள்

நாங்கள் மயக்க நிபுணர்கள்
மயங்க வைத்து உயிர் கொடுக்கும்
நனவுலக தேவதைகள்.

Dr. Sowbarnika.K.K.
Consultant Anaesthetist,
Kumaran Medical Centre, Coimbatore
ISA no: S0757

## மறுமையோ! மாயையோ!

போர்க்காயம் கண்ட மிகுவீரன்
பேரிடரில் அறுவை மேடையில்
குருதி தழுவிய தேகமது
இறுதி நெருங்கிய சுவாசமிது - அங்கே
மருத்துவன் முகக்கவசம் அணிந்து
அகக்கண் தெளிந்து
உயிர்வளி நூறுவீதம் கொடுத்து
ஊசியால் நாளம் துளைத்து
செந்நீரில் மயக்கமருந்தேற்றி
செவ்வனே வீரனின் வலியாற்ற
இவன் வசத்தில் அவன் சுவாசம்
இவன் கட்டுக்குள் அவன் அங்கம்
சதையறுக்கும் சிகிச்சையினால்
சேதங்கள் வலுவாகினதால்
இழையங்கள் இனி இழப்பதற்கொன்றுமில்லை

இருந்துமிவன் இயங்கியலை காக்க மறுக்கவில்லை
நாளம் வழி திரவங்கள்
காலமின்றி விரையுமிவன் கரங்கள்
செம்புனல் கொடுத்து மாற்றீடு – இவன்
செவ்விரலசைத்து உறுதிக்குறியீடு
சிரைவழி மருந்துகள் – திரைக்குப்பின்
இறைவழி வேண்டுதல்கள்
சுவாசித்து விழித்த அவன் கண்கள்
நேசித்து நெகிழ்ந்த உறவுகள்
முதல் மூச்சு கொடுப்பது நான்முகனோ?
கடைமூச்சு பறிப்பது காலனோ?
உயிர்சுவாசம் நிறுத்தி; தன் வசப்படுத்தி
உயிர்மீட்கச் செய்வது இவனோ!
சிற்றங்கீகாரம் பெறினும் – என்றுமிவன்
குறுநகை குறையாது முகக்கவச மறைவில்!
இவண் மயக்குனர்.....

Dr. Vasanth Sukumar,
Consultant Anaesthetist,
Coimbatore,
ISA no: V1327

# திணைமயக்கம்

கானகப் பேரிரைச்சலின் நடுவேப் பூக்கள் பிரசவிக்கப்படும்
காட்சிப்பிழையொன்று அரும்புகிறது.
ரீங்காரமிடும் வண்டுகள் ஆரண்ய காதுகளில்
துளையிடுகிறது மொட்டின் இடுப்பு வலியை

சற்றும் சலிப்பில்லாமல் சலனமின்றி
வந்தடைந்தார் சிம்சன் ஒருக் கோப்பை ஈத்தருடன்
குருதி ஊறிய கதறல் பழகியக் காட்டில் அன்று
புன்னகித்துப் பூத்திருந்தன செங்காந்தள் மலர்கள்
அனிச்சம் மொட்டும் தாழம்பூவும்
பேறுகால இரட்சகன் சிம்சன் சிருஷ்டித்தான் என
கிசுகிசுத்தான வனாந்திரப் பட்சிகளிடம்.

தாவரத்திரவியம் வனமெங்கும் மணம்வீச
இருள் தைத்த மௌனங்களின் ஆடைகளைக் கலைந்து
ஆத்மார்த்த ஆடலுக்கு ஆயத்தமாகியது கானக்கூடு.
பொல்லா விலங்குகளும் நையாண்டி நகைய
நைட்ரஸை தூபமிட்டார் டேவி மரத்தடியிலே அமர்ந்தபடி

ஆனந்தத் தாண்டவமாடியக் கிளையும் இலையும்
குடைச்சல் நீங்க மன்றாடிய வேலை, மூச்சிரைக்க
ஓடிவந்த வெல்ஸை முந்திக்கொண்டார் மார்ட்டன்,
இம்முறையும்
வாதை அண்டிடா வலி தீண்டிடா
இச்சோலை வனத்தை நேசிக்கும் இவர்கள்
அம்மலர்களை நித்தம் கொய்திடும்
சக மனிதனின் வன்முறைப் படலங்களை
மரத்துப் போகச் செய்தவனின் மத்தியில்
சிம்சனும், டேவியும், மார்ட்டனும் பெரிதாய்க்
கண்டுகொள்வதில்லை
வஞ்சனையின்றிப் பூந்தேனைக் களவாடும்
வண்டுகளை மட்டும்!

Dr. Kavin Chander,
Junior resident,
Mahatma Gandhi Medical College & Research Institute,
ISA no: K3120/A

# மயக்கவியல் துறை

உணர்வுகளை
உணர்ச்சியற்ற
நிலைப்பாட்டில்
வைத்திருக்க
நரம்பு மண்டலத்தை
கட்டுப்பாட்டிற்குள்
வைப்பவர்கள் -
"மயக்கவியல் துறை  மருத்துவர்கள்"

மூதாதையர்
காலத்தில்
அறுவை சிகிச்சை நிபுணர் -
மூளையினை
மரத்திட
காயத்தினை ஏற்படுத்தி உணர்வுகளை முடக்கி
னர்!

இப்பொழுதோ
எத்தனையெத்தனை
இரசாயனங்கள் -
அத்தனையும்
ரசிக்க வைக்கின்றன!

நோயின்
பிடியில்
நலிந்திருக்கும்
நீங்கள் -
நிம்மதியாக
விழி மூடி
உறங்கிட -
நடு நிசி கடந்து
விடியல் வேளையிலும்
விழிகள் மூடா
விழிப்போடு
உழைப்பவர்கள் -
"மயக்கவியல் துறை நிபுணர்கள்"

நீங்கள்
சுவாசிக்க
மறந்து -
மரணத்தின்
விளிம்பில்
மன்றாடும் தருணங்களில்
சர்வ சாதாரணமாக
சுவாச குழாயோடு
சமரசம் செய்பவர்கள்!!!

இருதயம்
துடித்திட
மறுத்திடும்
தருவாயில் -
இறந்திட
துடிக்கும் நபரின்
இருதயமாக
உரு மாறுபவர்கள்
"மயக்கவியல் துறை  மருத்துவர்கள்"

சாதாரணமாக
அசாதாரணங்களை
மானுட
உடற்க்கூட்டிற்குள்
நிகழ்த்தும்
மயக்கவியல் நிபுணர்கள் -
மயக்கவியல் துறையில்
மாயங்கள் செய்து
மாயையில் இருக்கும்
மனிதனுக்கு
வலியில்லா
மருத்துவத்தில்
மூழ்கடித்து
மாயாமாகிடும்
மருத்துவர்கள் -
மயக்கவியல் துறை  மருத்துவர்கள்!

Dr. N. Saranya
D.M.Cardiac Anesthesia (Ist yr PG),
Sri Ramachandra Institute of Higher Education and Research
ISA no: S6494

# பகுத்தறிவுக்கும் இடமுண்டு பக்திக்கும் பங்கமில்லை

எல்லாப் பொழுதுகளும்
இறைவன் படைப்பென்றால்
பொல்லாப் பொழுதுகள்
இருக்கவும் கூடுமோ…

வாழ்வதும் தாழ்வதுமே
ஊழ்வினைப் பயனென்றால்
வீழ்ச்சியும் எழுச்சிகளும்
பிறன்செய்யும் வினையன்றோ

இருக்கின்ற இடமெல்லாம்
இறைவன் நிறைகையிலே
வடக்கென்றும்தெற்கென்றும்
வாஸ்துகள் வகையாமோ…

விதியென்றும் விபத்தென்றும்
தவறுக்கு பெயரிட்டு
மதிகெட்டு போகலாமோ
மனங்கெட்டு நோகலாமோ..

நடக்கின்ற நதியெல்லாம்
கடலுக்கு சொந்தம்போல்
சமயங்கள் அனைத்திற்கும்
அன்புதான் சாரமன்றோ

உலர்ந்தாலும் மகிழ்வோடு
மலர்கின்ற மலர்கள்போல்
பிறவியின் பயனெல்லாம்
பேரன்பில் திளைப்பதற்கே..

அன்புதான் கடவுளர் இங்கே
அன்புதான் சமயம் இங்கே
அன்புக்கு நிறங்கள் இல்லை
அன்புக்கு அண்டமேஎல்லை..

Dr. K. Selvakumar
Junior resident,
Government Cuddalore Medical College,
ISA no: S8972/A

# தமிழ் என் தாய்

என் நாவேனும் கருப்பையிலிருந்து பிறந்த தாயவள்!
என்னை மழலை மொழி பேசச்செய்து மகிழ்பவள்!
அன்பெனும் மனிதமொழி உணர கற்பித்தவள்!
அவணியை ஆள்பவள்! ஆட்சி செய்பவள்!

பக்தியின் வடிவம் அவள்!
பக்தியின் மூலம் அன்பென உணர்த்தியவள்!
அன்பினால் அகிலத்தில் கருணைமரம் வளரச்செய்பவள்!
அவள் இல்லையெனில் நான் இல்லை என்று உலகோர் சொல்ல,
என் பிள்ளைதான் என் உயிர் என்பவள்!

நான் துவண்டு நிற்கும் வேளையிலும்,
தனிமையில் வாடும் வேளையிலும்,
காதலியிடம் காதல்மொழி பேசும்போதும்,
பேசியகாதலி பேசாமல் போனபோதும்,
உலகே என்னை எதிர்த்தபோதும்,
உலகமே என்னோடு நட்பு பாராட்டும்போதும்,
அனைத்திலும் என் உடன் நிற்பவள்!
என் உயிரில் கலந்தவள்!
தாய்த்தமிழ் அவள் பெயர்!

Dr. Sivanthi Bala,
Junior Resident,
Indira Gandhi Medical College, Puducherry
ISA no: V2327/A

# பார்த்த ஞாபகம் இல்லையோ?

அழகிய காலை வேளை
கையில் ஒரு தேநீர் கோப்பை
நின்றேன் சன்னலோரத்தில்
தூரத்தில் ஒரு தண்ணீர் குழாய்
துளிர்ந்தது தண்ணீர்த்துளி
அந்த தண்ணீர் துளியும் கேட்டது
சொட்டி கிடந்த என்னை
திகட்டாமல் குடித்த
சிட்டு குருவியும் பார்த்த ஞாபகம் இல்லையோ?

சற்றே திரும்பிப் பார்த்தேன்
சுவரில் கண்சிமிட்டியது குளிர் சாதனம்
தென்றலாய் தீண்டி வந்த என்னை
பார்த்த ஞாபகம் இல்லையோ?
தென்னையும் கேட்டது
தொலைகாட்சியில் ஒலித்தது பாடல்
இனிய என் குரலை மறந்தாயோ?
குயிலும் கேட்டது

திறந்தேன் அலமாரியை
சிரித்ததெல்லாம் ஆங்கிலப்புத்தகம்
மனம் எங்கோ சென்றது
கண்களில் துளிர்த்தது கண்ணீர்
என் தமிழும் என்னை கேட்டது
பார்ந்த ஞாபகம் இல்லையோ?

Dr. N. Sunmathi,
Junior Resident,
Govt. Mohan Kumaramangalam Medical College
ISA no: S9130/A

# மயக்கவியல்

பதினைந்து நாழிகை பட்டினி வைத்து

வளைந்த கருநிலை போன்று யாக்கை கொண்டு

தண்டுவடத்தில் எழுத்தாணி பதித்து

நாளங்களில் நீர் பாய்த்து

அறுவைப் பண்டுவம் செய்ய ஆயத்தம் செய்து

வலி இல்லா கீறல் தாங்கும் மேனி அமைத்து

கெண்டைக்கால் அலங்காமல் கொண்டிருத்து

நாடி துடிப்பை ஒவ்வொரு கணமும் கண்வைத்து

செந்நீர் மல்கினால் எங்குருதி கொதித்து

மையல் பேசும் மொழி அமைத்து

மழலை அழுகை கண்டு ஆறுதல் அடைந்து

நரம்பு தொகுதியில் கோலோச்சி

பிராணன குழல் வழியே வளி அனுப்பி

இயற்பியலைக் கரைத்துக்குடித்து

நெஞ்சில் கரம் கொண்டு உயிர்த்தெழ வைத்து

பாசக் கயிற்றை அவிழ்த்தெறிந்து

காலதேவனுக்கு அறைகூவலிட்டு

திரை எழுப்பும் ஒலி, செவியில் ரீங்காரமிட்டு

இன்னிசை கொண்டு இதயத்துடிப்பின் திசையறிந்து

தளர்வு நிலையில் இருந்து மறுபிறவி ஈன்று

அவ்வுயிர் பார்க்கும் முதல் முகம் நாங்கள்!

நோயரின் கடை நம்பிக்கை நாங்கள்!

இவ்வையம் கவிபாடா மாணிக்கம் நாங்கள்!

போற்றப்படாத கதாநாயகர்கள் நாங்கள்!

மறைநிலை வரீர்கள் நாங்கள்!

இருந்தும்....

எங்கள் பணி என்றும் சிறந்திடுமே!!

Dr. Suvetha Shanmugam
Junior Resident,
Government Cuddalore Medical College,
ISA: S9172/A

